Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

23

# தமிழில் கூத்துப் பற்றிய செய்திகள்

**முனைவர் பீ ரகமத்பீ**
**தமிழ்த்துறை, பாரதியார் கலை அறிவியல் கல்லூரி,**
**தேவியாக்குறிச்சி,ஆத்தூர் வட்டம்,**
**சேலம் மாவட்டம் -636112.**

**ஆய்வு நோக்கம்**

எண்ணற்றக் கலைகள் இருந்தாலும் மண்மணம் மாறாத கூத்துக்கலைகள் தமிழனின் தனித்திறனை வெளிப்படுத்துகிறது. என்பதனைச் சுட்டிக்காட்டுவதே இவ்வாய்வின் நோக்கம்.

**திறவுச் சொற்கள் :** கூத்தர், சந்திக்கூத்து, விநோதக் கூத்து, வள்ளிக் கூத்து, குறவர் கூத்து, துடிக் கூத்து, பாவைக் கூத்து.

**முன்னுரை**

தமிழ் பன்னெடுங்காலமாகவே இசை, இசைக் கருவிகள் இசைத்தல், நாடகம், கூத்துக்கலைகள் என்று ஏராளமான நுண்கலைகள் மக்களிடையே பரவி தமிழின் பெருமையைப் பறைசாற்றுகின்றன. இக்கட்டுரையில் கூத்துக்கலையின் வகைகள், கூத்தர் நிலை, கூத்தர் பற்றிய விளக்கங்கள், கூத்துப்பற்றிய குறிப்புகள், கூத்தரின் ஒப்பனை போன்ற தலைப்புகளில் இக்கட்டுரை அமைந்துள்ளது. கூத்துக்கலைப் பற்றிய செய்திகள் தமிழ் இலக்கியங்களில் ஏராளமாக உள்ளது. பக்கவரையறைக்குள் குறிப்பிட்டுக் கூற இயன்றவரை முயற்சிக்கப்பட்டுள்ளது.

தமிழில் உள்ள மிகப் பழமையான இலக்கண நூல் அகத்தியம் ஆகும். அகத்தியம் முதற் சங்கத்திலேயே இருந்துள்ளது. அதிலேயே நாடகக் கூத்து இருந்துள்ளது என சிலப்பதிகாரத்துக்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் சங்க காலத்தில் கூத்த நூல், சயந்தம் நூல், மதிவாணர் நாடகத் தமிழர், முறுவல் போன்ற நாடக நூல்கள் இருந்துள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார்.

**‘தமிழ் நாடகத்தின் தோற்றம்,**
**மோனத்து இருந்த முன்னோன் கூத்தில்**
**உடுக்கையில் பிறந்தது ஓசையின் சுழலே**
**ஓசையில் பிறந்தது இசையின் உயிர்ப்பே**

**இசையில் பிறந்தது ஆட்டத்து இயல்வே**
**ஆட்டம் பிறந்தது கூத்தினது அமைவே**
**கூத்தில் பிறந்தது நாட்டியக் கோப்பே**
**நாட்டியம் பிறந்தது நாடக வகையே' 1 (கூத்தநூல் - தோற்றுவாய்)**

இறைவன் ஆடிய ஆதிக்கூத்தில், உடுக்கையிலிருந்து பிறந்தது ஓசை, ஓசையின் சூலிலிருந்து இசையின் உயிர்ப்பும், அதனின்று ஆட்டமும், ஆட்டத்திலிருந்து கூத்தின் அமைதியும் (ஒழுங்கு) அந்த அமைதியிலிருந்து நாட்டியக் கோப்பும் (ஒழுங்கு) அவ்வித ஒழுங்கிலிருந்து நாடக வகைகளும் தோன்றின என கூத்த நூலில் உள்ள பாடல் வரிகள் விளக்குகின்றன. இவ்வாறு பிறந்த கூத்துத் தொல்காப்பியர் காலத்தில் வளர்ச்சி அடைந்து புகழ்ப் பெற்றிருந்தது என்பதை,

**'தாவி னல்லிசை கருதிய இடந்தோர்க்கு**
**ததர் ஏத்திய துயிலெடை நிலையும்**
**கூத்தரும், பாணரும், பொருநரும், விறலியும்**
**ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றி' (தொல்.புறத்.29)**

என்ற பாடலில் புறத்திணை நூற்பாவில் தமிழிசை வளர்த்த கலைஞர்கள் பெற்ற இடம் தெளிவாகிறது. இவர்கள் சிறுசிறு குழுக்களாக சேர்ந்து வளமைத் தேடி ஊர் ஊராய்ச் சென்று கலை வளர்த்த அவர்தம் வாழ்க்கைச் சூழல்களும், கலைத்திறனும் குறித்த செய்திகள் இங்கு இடம் பெறும். சங்க காலத்தில் கூத்து முதலிய எல்லாக் கலைகளும் இருந்தன என்பது புலனாகிறது.

**இரு கூத்து வகைகள்**

கூத்து இருவகைப்படும். அவை

1. அகக் கூத்து - அரசருக்காக ஆடப்படும் வேத்தியலை அகக் கூத்து என்றழைப்பர்.

2. புறக்கூத்து - பிறருக்காக ஆடும் பொவீயலை புறக்கூத்து என்றழைப்பர்.

நாடகம், நாட்டியம் ஆகிய இரண்டும் 'கூத்து' என்றே அழைக்கவும் பெற்றது. அகக்கூத்து இருவகையினைக் கொண்டிருந்தது சந்திக் கூத்து மற்றும் விநோதக் கூத்து.

**சந்திக் கூத்து**

சாக்கம் - தாளத்தினை அடிப்படையாகக் கொண்ட கூத்தாகும். மெய்க்கூத்து - அகச்சுவையினை அடிப்படையாகக் கொண்ட கூத்தாகும். அபிநயக் கூத்து - பாட்டின் பொருளினை அபிநயித்து கதைத் தழுவாது வரும் கூத்தாகும். நாடகக் கூத்து -

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

கதையினைத் தழுவி நடிக்கும் கூத்தாகும்.

**ஏழுவகை விநோதக்கூத்து**

1. குரவைக் கூத்து - ஒன்பது கலைஞர்கள் காதல் அல்லது வெற்றிப்பாக்கள், பாடி கை கோர்த்து ஆடும் கூத்தாகும். 2. கழாய்க்கூத்து - கலை நடனம் என அழைக்கப்படும் கூத்து. 3. குடக்கூத்து - கரகம் என அழைக்கப்படும் குடக்கூத்து, 4. கரணம் - பாய்ந்து ஆடப்படும் கூத்தாகும். 5. பார்வைக் கூத்து - கண்களினால் நோக்கப்படும் கூத்து. 6. வசைக்கூத்து - நகைச்சுவை உணர்வுகளினை மையமாகக் கொண்ட கூத்தாகும். 7. சாமியாட்டம் அல்லது வெறியாட்டம். 8. வென்றிக் கூத்து - மாற்றான் ஒடுக்கப்படுதலும் மற்ம் மன்னனின் உயர்ச்சியினைப் பற்றியும் வெளிக்காட்டக்கூடிய கூத்தாகும். வசைக்கூத்து விநோதக் கூத்து ஆகிய கூத்துக்கள் பாட்டின் உறுப்புகளிற்கேற்ப பாவகைகள் எடுத்தாளப்படும் கூத்துக்களாகும். இவ்வுறுப்புகள் விலக்குறிப்புகள் என அழைக்கப்படும்.

**கூத்துப் பற்றிய குறிப்புகள்**

கூத்துப் பற்றி நிறைய இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன.

**'நடமே நாடகம் கண்ணுள் நட்டம்**
**படிதம் ஆடல் தாண்டவம் பரதம்**
**ஆறுதல் தூங்கல் வாணி குரவை**
**நிலயம் நிருத்தம் உத்தெனப் படுமே'3 (திவாகர நிகண்டு)**

என்ற திவாகர நிகண்டில் நாடகத்தின் வகைகளைப் பற்றிக் கூறும்போது குரவைக் கூத்தையும் குறிப்பிட்டுள்ளது.

**'கூத்தில் பிறந்தது நாட்டியக் கொப்போ**
**நாட்டியம் பிறந்தது நாடக வகையே'4 (கூத்து நூல்)**

என்ற இனிய வரிகள் மிகப்பழமையான கூத்து நூலில் காணப்படுகின்றன. பழங்காலத்தில் நாடகம் என்பது நடன நாடகமாகவே விளங்கியது. ஆடல், பாடல், அபிநயம் இணைந்து கதை தழுவி மக்களைக் கவரும் கூத்து வகையே நாட்டிய நாடகம் எனக் கூறுவது பொருந்தும்.

**'வாடா வள்ளி வயலர் ஏத்திய'5 (தொல். புறத்திணை 5)**

என்ற தொல்காப்பிய நூற்பா வரி சுட்டிக்காட்டும் வள்ளிக் கூத்தும், வேலன் வெறியாடல், பாலசரித நாடகங்கள் முதலியவைகளும், நாட்டிய நாடகப் பாணியில் அமைந்த வடிவங்களாகவே இருக்க வேண்டும். எட்டுத் தொகையில் காணப்படும் பாடல்கள்

நாடகப் பாத்திரங்களின் தனிமொழி போலவே உள்ளமையால், தனிநடிப்பு, நடனத்திற்கு ஏற்றவையாகவே அமைந்துள்ளன. பழந்தமிழ் மக்களின் வாழ்வில் சிறப்பான இடம்பெற்ற குரவைக் கூத்து வகையினைப் பற்றி,

**'வேங்கை முன்றில் குரவை'6 (நற். 276)**

**'வெண்மணல் குரவை'7 (ஐங்குறுநூறு, 181)**

**'பரதவர் மகளிர் குரவை'8 (மதுரைக் காஞ்சி. 97)**

**'மன்றுதொறும் நின்ற குரவை'9 (மதுரைக்காஞ்சி 615)**

என்ற வரிகளில் நற்றிணை, ஐங்குறுநூறு, மதுரைக்காஞ்சியிலும் கூத்து குறித்த செய்திகளை அறிய முடிகிறது. ஒருவர் மட்டுமே ஆடிய அபிநயக்கூத்து காலந்தோறும் வளர்ந்து பலர் பல வேடங்களில் புனைந்து வந்து மாறி, மாறி ஆடும் நிலைக்கு மாறியது. இதனை,

**'ஆடுங் கூத்தர்வா லாருமி ரொருவழீக்**
**கூடிங் கோலத் தொருங்குநின் றிலாது'10 (சிலம்பு.28)**

என்று சிலப்பதிகாரத்தில் ஆடுங்கூத்தர் என்று குறிப்பிட்டுள்ளது. கூத்து வகைகளையும், கூத்தர்களின் தன்மையையும் பல இலக்கியங்கள் குறிப்பிட்டுள்ளன. தமிழனின் பாட்டுத் திறனுக்கும், அபிநயத் திறனுக்கும், நடிப்புத் திறனுக்கும் சிறிதும் சளைத்தவர்கள் இல்லை என்பதை அறிய முடிகிறது.

**கூத்தர் பற்றிய செய்திகள்**

கூத்து என்பது திருவிழாக் காலங்களில் ஊர்ப்பொதுவில் நடிக்கப்படும் கலை வடிவமாகும். பாணர், கூத்தர், பொருநர், விறலியர் போன்றோர் இக்கலையில் ஈடுபட்டு உள்ளனர். திருவிழா என்பது ஆண்டுதோறும் நிகழ்வதன்று. ஓர் ஆண்டில் நான்கு அல்லது ஐந்து மாதங்களுக்கு மட்டுமே நிகழ்த்தப்பெறும். கூத்துக் காலங்களில் பொருளை ஈட்டும் கலைஞர்கள் மீதமுள்ள நாட்களில் வறுமையில் வாடுவது இயல்பே. பொருநராற்றுப்படையில் விழாக்காலம் முடிந்து சிறிது காலம் வரை விழா நடந்த ஊர்களில் சோறிடுவது மரபு. அவ்வாறு சோறிடுவதையும் பெறுவதையும் இழுக்கெனக் கருதி வேற்றுப்புலத்தை நாடிச் செல்லும்,

**'அறாவு யான பரகன்றலைப் பேரூர்ச்**
**சாறுகழி வழிநாட் சோறுநசை யுறாது**
**வேறுபுல முன்னிய விரகறி பொருந'11 (பொருந. 1 -3 )**

என்னும் பாடலடிகளில் இரந்து உண்ணும் பழக்கம், பண்பு கூத்துக் கலைஞர்களுக்கு

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

இல்லை என்பதைப் புலப்படுத்துகிறது. கலைஞர்கள் தன்மானம் மிக்கவர்களாக இருந்துள்ளனர். தம்மைப் புறந்தள்ளாமலும், இழிவுபடுத்தாமலும் உள்ள வள்ளல்களையே நாடிச் சென்றுள்ளார்கள். நன்னனிடம் பரிசில் பெற்று வரும் கூத்தர்கள் வழியில் எதிர்ப்படும் தம் இனக் கூத்தர்களைக் கண்டு, நல்ல ஆறு, மலை உச்சியினின்றும் இங்கிக் கடலை நோக்கிச் செல்வது போல நன்னனை நோக்கிச் சென்ற யாம் பரிசில்களைப் பெற்று வருகின்றோம் என்று ஆற்றுப்படுத்துவதை,

தூமலர் துவன்றிய கரைபொரு நிவப்பின்

**மீமிசை நல்யாறு கடல்படர்ந் தாங்க**

**யாம் அவன் நின்றும் வருதும்'12 (மலைபடு. 47-49)**

என்னும் பாடலடிகளால் உணரமுடிகிறது. இதன் மூலம் கூத்தர்கள் வறுமையிலும் தம்மை ஏற்போரையே நாடிச் சென்றுள்ளனர். காடு நெடுந்தொலைவினது என எண்ணாராய், கூத்தர்கள் பெரிய குதிரைப் படையினையுடைய நல்ல போர்த்திறன் கொண்ட சேரனை நாடிச் செல்வர்,

**'காடுமிக நெடிய வென்னார் கோடியர்**

**பெரும்படைக் குதிரை நற்போர் வானவன்**

**திருத்துகழஞ் சேவடி நசைஇப் படர்ந்தாங்கு'12 (அகநா.309, 9-11)**

என்ற அகநானூற்றுப் பாடலடிகளால் அறியலாம்.

**'மென்சொற் கலப்பையர் திருந்து தொடை வாழ்த்த'13**

என்ற பதிற்றுப்பத்துப் பாடலடிகளின் மூலம் கலப்பையர் என்பது முழவு, தூம்பு, பதலை, கரடிகை, மார்ச்சனை முதலாகிய இசைக்கருவிகளைக் கொண்ட கூத்தர் என்பதைக் குறிப்பிடுகின்றது. கூத்தர்கள் வயிரியர், கண்ணுனர் என்றழைத்துள்ளனர். வயிரியர் என்பவர் பாடுங்கூத்தர் என்பதை,

**'அருஞ்சிறையறையிசை வயிரிய'14 (பரி.10: 130)**

இப்பாடலடி குறிப்பிடுகின்றது. கண்ணுனர் என்பவர் சாந்திக் கூத்து நிகழ்த்துவாரைக் குறிப்பிடுவதாக உள்ளது. இங்கு கண்ணுளர் கழைக் கூத்தாடுவதைப் பற்றி குறிப்பிட்டுள்ளது. கூத்தரைப் போன்றே ஒரு பக்கத்தே மூங்கிலால் அமைந்த புல்லாங்குழல் ஒலிக்க, பலவகை வாத்தியங்கள் முழங்க ஆடுகின்ற கழைக் கூத்தி நடந்த முறுக்குண்ட புரியையுடைய வன்மையான கயிற்றின் மீது ஆடுவாள்.

**'கழைபாடு இரங்க பல்லியம் கறங்க**

**ஆடுமகள் நடந்த கொடும்புதோள் கயிற்று'15 (நற்றிணை.95 2-4)**

என்ற பாடலால் அறியலாம். பிறிதொரு பாடலில் காண்போருக்கு விருப்பம் தரும் நல்ல மகளிர் தம் கூத்து என்பதால் கூத்தர் போன்றே கூத்தியரும் வாத்தியங்கள் முழங்க பாடி ஆடுதல் புலனாகும். பத்துப்பாட்டில் இறுதிப் பாடலாகிய மலைபடுகடாம் கூத்தராற்றுப்படை என்ற பெயராலும் வழங்கப்பட்டுள்ளது. கூத்தர்கள் குழு குழுவாக ஊர்தோறும் சென்று கூத்து நடத்தும்போது, கூத்தர்கள் கூத்துக்கு உரிய இசைக் கருவிகளையும், பிறவற்றையும் பைகளில் போட்டு கட்டிய மூட்டைகளை மூங்கில் கால்களில் மாட்டித் தூக்கிச் செல்வர். அத்தோற்றம் கிளைகளில் கொத்து கொத்தாகக் காய்த்துத் தொங்கம் பலாக்காய்களை நினைவூட்டின என்பதை,

**‘கொடிதரு பாணிய பதலையும் பிறவும்**
**கார்கோட் பலவின் காய்துணர் கடும்ப**
**நேர்கீர் சுருக்கிக் காய கலப்பயிர்’16**

என்ற வரிகள் விளக்குகின்றன. கூத்தர்கள் பற்றிய ஏராளமான செய்திகள் நம் தமிழ் இலக்கியங்களில் சுட்டப்பட்டுள்ளன. தமிழனுக்கு இசைக்கலை, நாடகக் கலை, கூத்துக்கலை, பாட்டு, இசைக்கருவிகள், கலைஞர்கள் என்று சிறப்புற இருந்துள்ளனர்.

**கூத்தின் வகைகள்**

கூத்து வகைகளை வகைப்படுத்தி, அதன் தன்மைகளையும் என்னென்ன கூத்து வகைகள் உள்ளன என்பதையும் இவ்விடத்தே காணலாம்.

**வன்னிக்கூத்து**

வாடா வள்ளி எனத் தொல்காப்பியரால் சிறப்பிக்கப்பட்ட வள்ளிக் கூத்து பல சிற்றுhர்களிலும் நடத்தப்பட்டு வந்தது என்பதை,

**‘வாடா வள்ளியின் வளம்பல தரூஉம்**
**நாடு பல கழிந்த பின்றை’17 (பெரும்பாணா. பா.370-371)**

என்று பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது.

**வணங்கைக் கூத்து**

வேலவன் சூரர்களை வென்றபோது பேய்மகள் ஆடிய துணங்கைக் கூத்தும் திருமுருகாற்றுப்படையில் சுட்டப்படுகிறது. சூரனைக் கொன்ற வெற்றியைப் புகழ்ந்து பாடிப் போர்க்களத்தில் துணங்கைக் கூத்து ஆடுகின்றனர். இதனை,

**‘வென்றடு விறற்களம் பாடித்தோள் பெயரோ**
**நிணந்தின் வாயள் துணங்கை தூங்க’18 (திருமுரு. 55-56)**

என்பதால் அறியலாம். நாடகம் ஆடும் பெண்களை நாடக மகளிர் எனவும் அவர்கள்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

கூத்தாடுமிடத்தை ஆடுகளம் எனவும் குறிப்பிடும் செய்தியை அறிய முடிகிறது.

**குறவர் கூத்து**

திருமுருகாற்றுப்படையில் முருகனைப் போற்றிப் பாடிய மலைவாணரின் கூத்துக்களை அறியலாம். குறவர்கள் கள்ளுண்டு மகிழ்ந்து தம் குழுவினருடன் குரவையாடினர். இக்கூத்து தொல்குடி மக்களின் கூத்தாகும் என்பதை,

**நீடமை விளைந்த, தேக்கம் டேறல்**
**குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து**
**தொண்டச் சிறுபறைக் குரவை யர்'19 (திருமுரு.பா. 195-197)**

என்ற வரிகள் குறவயின மக்கள் ஆடக்கூடிய குறவர் கூத்து என்றழைக்கப்பட்டுள்ளது.

**துடிக்கூத்து**

சூரபதுமனைக் கொன்ற பின் முருகன் கடலின் மீது உடுக்கை அடித்துக் கொண்டு கூத்தாடியது.

**குடைக் கூத்து**

படைகளை இழந்து அசுரர்கள் தோல்வியுற்ற நிலையில், வீரமுருகன் தன் குடையைச் சாய்த்து ஆடியது.

**குடக் கூத்து**

வாணாசுரனால் கைது செய்யப்பட்ட காமனின் மகன் அநிருத்தனை விடுதலை செய்வதற்காகக் கண்ணன் குடத்தின் மீது ஆடியது.

**குரவைக் கூத்து**

போர்க்களத்து அமைந்த பாடி வீட்டில் சினமிக்க வீரர்கள் குரவைக் கூத்தாடுவதை,

**'சிமாந்தர் வெழிக் குரவை**
**ஓத நீரிற் பெயர்ப்பு பொங்க'20 (புற.நா.22 : 24-26)**

என்ற பாடலின் மூலம் சுட்டுகின்றது. இது தவிர, மருத நிலத்து உழத்தியர் ஒன்றுக்கு ஒன்று அண்மையில் உள்ளதாகிய பல இடங்களில் புதிது, புதிதாக குரவைக் கூத்தைப் பகலிலும், இரவிலும் ஆடுவதை,

**'மருதம் சான்ற மலர்தலை விளைவயல்**
**செய்யுள் நாரை ஒய்யும் மகளிர்**
**இரவும் பகலும் பாகிழை களையார்**
**குறும்பல் யாணர்க் குரவை அயரும்**

**காவிளி மண்டிய சேய்விரி வனப்பின்'21 (பதிற்.73: 8-9)**

என்பதால் குரவை அடுத்தடுத்து பல இடத்து பண்டைய வஞ்சி நகரைச் சார்ந்த காவிரியாறு ஓடும் கரைகளில் நிகழ்ந்தமையை அறிய முடிகிறது.

**பாவைக் கூத்து**

அவுணர்களின் போர்க்கோலம் ஒழிவதற்காக திருமகள் ஆடியது பாவைக் கூத்தாகும்.

**கூத்தர் பயன்படுத்திய இசைக் கருவிகள்**

கூத்தர்கள் பலவகையான இசைக்கருவிகளை பயன்படுத்தினர், இக்கருவிகளின் மூலம் தங்களுக்கு வரும் இடர்களையும் களைப்புத் தெரியாமல் இருப்பதற்கும் இசைக்கருவிகளை மீட்டுவர். இவர்கள் காடு மலைப்பகுதிகளைக் கடந்து செல்லும்போது இவர்களின் பாதை மாறக் கூடம், இவ்வாறு திக்கு திசை தெரியாமல் மயங்கும்போது தங்களது இசைக்கருவிகளை இசைப்பர்.

**'காடுகாத்து உறைவும் கானவர் உளரே**
**நிலைத்துறை வழீஇய மதன்வழி மாக்கள்**
**புனல்படு பூசலின் விரைந்து வல் எய்தி**
**உண்டற்கு இனிய பழனும் கண்டோ'22 (மலைபடு,279 - 282**

இந்த இசையைக் கேட்ட காடு காவல் செய்யும் கானவர் விரைவாக வந்து உண்ண உணவும் பழங்களும் கொடுத்து கூத்தர் செல்ல வேண்டிய வழியினைக் காட்டி உதவி செய்வர். கூத்தர்கள் இருக்கும் இடத்தைப் பிறர்க்குத் தெரிவிக்க 'கல்' என்னும் ஓசையை எழுப்புவர். இந்த ஓசையை,

**'அகன் கண் பாறைத் துவன்றிக் கல்லேன்**
**இயங்கல் ஓம்பி நும் இயங்கள் தொடுபின்'23 (மலை.276)**

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. கடு எனும் மரத்தினால் ஆன நீளமான கம்பினை எடுத்து இருபக்கத்தும் இசைக்கருவிகளைப் பை, உறி முதலியவற்றில் சம எடை உடையவையாகக் கட்டி எடுத்துச் செல்வர்.

**கூத்தரின் ஒப்பனை**

நாடகமாடும் கூத்தர் தாம் ஏற்கும் பாத்திரத்திற்கேற்ப ஒப்பனை செய்து கொண்டனர். ஒரு நாடகத்தில் அரசனாக வந்தவன் அடுத்த நாடகத்தில் இரவலனாக வருவான் இப்படி மாறிமாறி வேடங்கொள்வது கோடியரான கூத்துக் கலைஞரது

இயல்பாகும். இதனை,

**‘கோடியர் நீர்மை போல முறைமுறை**

**ஆடுநர் கழிவும் இவ்வுலகத்து’24 (புறம்.29)**

என்ற புறநானூறு பாடலின் மூலம் அறிய இயலுகிறது.

**முடிவுரை**

கூத்துக் கலைஞர்கள் நாடகக் கலைஞராகவும் இசைக் கலைஞராகவும் இருந்துள்ளனர். அரிய கலைகளின் உறைவிடமாக வாழ்ந்த கூத்துக் கலைஞர்கள் சங்க காலம் தொட்டே சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்றாலும், தொண்டை நாட்டு மன்னர்கள் கலைஞர்களை ஆதரித்துள்ளனர். கூத்தர் என்னும் சொல் கூத்துக் கலைஞர்களை மட்டுமின்றி சிவபெருமானையும் குறிக்கும். இக்கூத்தர்கள் மக்களை இன்பக் களிப்பும், நல்வாழ்வும் நாடகங்களில் முதன்மையாகக் கருதியுள்ளனர். கூத்தர்கள் வறுமை நிலையை அடைந்தவர்களாக இருந்தாலும், இரந்து வாழ்வதை விரும்பாதவராக தன்மானத்தோடு வாழ்ந்துள்ளனர்.

**சான்றெண்**

1. பா. சம்பந்தம், தமிழில் கூத்து வகைகள், தமிழில் நாடகம், வரலாறும் வளர்ச்சியும் (கருத்தரங்க கட்டுரை) ப.285, பிப்ரவரி 2013.
2. தொல்காப்பியர், தொல்.புறத்திணை, நூ.29.
3. திவாகர நிகண்டு
4. கூத்து நூல்
5. தொல்.புறத்திணை 5
6. நற்றிணை -276
7. ஐங்குறு நூறு -181
8. மதுரைக் காஞ்சி, 97
9. மதுரைக் காஞ்சி, 615
10. சிலப்பதிகாரம், 28, 165, 166 வரிகள்
11. பொருநராற்றுப்படை, 1.3
12. அகநானூறு 309 9 -11
13. பதிற்றுப்பத்து, 15-27
14. பரிபாடல் 10-130
15. நற்றிணை 95: 2-4

16. மலைபடுகடாம் பா.11- 13
17. பெரும்பாணாற்றுப்படை, 370-371
18. திருமுருகாற்றுப்படை, பா. 55 -56
19. திருமுருகாற்றுப்படை, பா.195 - 197
20. புறநானூறு, பா.22 : 22-23
21. பதிற்றுப்பத்து 73: 8-13
22. மலைபடுகடாம் 279-282
23. புறநானூறு 29